මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/02/29/02/02/38 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. } දිනය / திகதி / Date } 2025.10.

**சுற்றுநிருப இலக்கம்: 07/2019 (i)**

அனைத்து மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுக்களதும் செயலாளர்கள்,

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து அதிபர்கள்,

**ஆசிரியர்களின் நியமனப் பாடத்தை மாற்றுதல்**

மேற்படி விடயத்திற்குரியதாக வெளியிடப்பட்டுள்ள 2019.02.25ம் திகதியுடைய கல்விச் சுற்றுநிருபம் 07/2019 இற்கு மேலதிகமானது.

02. குறித்த சுற்றுநிருபத்தின் விதிமுறைகளின் பிரகாரம் ஆசிரியர்களது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடம் மாற்றம் செய்யப்படமாட்டாது என்பதாக குறிப்பிடப்பட்டிருப்பினு,, ஆசிரியர்களை ஆட்சேர்க்கும் போது வழங்கப்படும் நியமனக் கடிதத்தில் நியமனப் பாடம் மற்றும் நியமன மொழி மூலம் குறிப்பிடப்படாமை மற்றும் நியமனப் பாடத்திற்குப் புறம்பாக தற்போது கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதால் தற்போது பாடசாலை முறைமையில் பணியாற்றும் ஆசீர்யர்களை, பாடங்களுக்கான பற்றாக்குறைகள்/ மிகை ஆசிரியர்களை கணிப்பிடும் போதும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் போதும் பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதை அவதானிக்க முடிந்துள்ளது.

03. ஆகையால் இவ் விடயம் தொடர்பில் குழுவொன்றின் உதவியுடன் ஆராய்ந்த பின்னர் அக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் மேற்படி பிரச்சனைக்குத் தீர்வொன்றாக இச் சுற்றுநிருபத்தில் கீழே தரப்பட்டுள்ள நடைமுறைகளுக்கமைய செயற்படுமாறு அறியத் தருகின்றேன்.

04. அதற்கமைய, இங்கு 05ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நியமன வகுதிகளுக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் மாத்திரம் இச் சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் 06 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கால வரையறைகளைப் பின்பற்றி அவர்களது நியமனப் பாடம்/ நியமன மொழி மூலத்தை குறிப்பாக வழங்குவதற்கு அல்லது ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள உரிய நியமனப் பாடம்/ நியமன மொழி மூலம் ஆகியவற்றை திருத்தம் செய்ய நடவடிக்கையெடுத்தல் வேண்டும் என்பதுடன், இச்

சந்தர்ப்பத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதால், தொடர்ந்தும் கல்விச் சுற்றுநிருபம் 07/2019 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் வலுவில் இருக்கும்.

## 05. நியமனப் பாடத்தைத் தீர்மானிப்பதற்காக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய தகைமைகள்/ நியதிகள்

<table>
<tr><th>வகுதி இலக்கம்</th><th>வகுதி</th><th>நியமனப் பாடத்தை தீர்மானிப்பதற்கு/ திருத்தம் செய்வதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள்</th></tr>
<tr><td>I</td><td>நியமனக் கடிதத்தில் நியமனப் பாடம் குறிப்பிடப்படாத ஆசிரியர்கள்</td><td rowspan="5">கீழே I மற்றும் ii இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விதத்தின் கீழ் மாத்திரம் தகைமைகளைக் கொண்டிருப்பின் கருத்தில் கொள்ள வேண்டும்.<br><br>i. உரிய பாடத்தை தொடர்ச்சியாக அண்மித்த முந்தைய 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் பிரதானமான பாடமொன்றாக கற்பித்திருத்தல் .<br>மற்றும்<br>குறித்த பாடத்தில் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.9இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள உரிய பாடத்திற்கான ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>இப் பாடத்தை பிரதானமான பாடமொன்றாக உள்ளடக்கி இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.7 இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள பட்டமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>குறித்த பாடத்தை பிரதானமான பாடமொன்றாக கொண்டுள்ள அல்லது குறித்த பிரதான பாடம் சார்ந்த பிரயோக கற்பித்தல் பயிற்சி உள்ளடக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.14 இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள பட்டப் பின் கல்வி டிப்ளோமா ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்<br><br>ii. தொடர்ச்சியாக அண்மித்த முந்தைய 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தில் பிரதான பாடமாக கற்பித்திருத்தல்.<br>மற்றும்<br>குறித்த பாடத்திற்குரியதாக 150 மணித்தியாலயங்களுக்கு குறையாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் கலந்திகொண்டிருத்தல்.<br>அல்லது<br>அண்மித்த 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு வினாப் பத்திர பரீட்சகர் ஒருவராக செயற்பட்டிருத்தல்</td></tr>
<tr><td>II</td><td>நியமக் கடிதத்தில் பாடத்துறை மாத்திரம் (உ+ம்: கலைப் பட்டம், விஞ்ஞானம்/ கணிதப் பட்டம்) குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்கள்</td></tr>
<tr><td>III</td><td>நியமனக் கடிதத்தில் நியமனப் பாடம் குறிப்பிடப்பட்டிருப்பினும், தற்போது பாடசாலைப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடம் நியமனப் பாடத்திலிருந்து வேறுபடல்</td></tr>
<tr><td>IV</td><td>நியமனக் கடிதத்தில் நியமனப் பாடம் குறிப்பிடப்பட்டிருப்பினும், குறித்த பாடம் காலப் போக்கில் பாடசாலை பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருத்தல்.</td></tr>
<tr><td>V</td><td>நியமனப் பாடம் குறிப்பிடப்பட்டிருப்பினும், பிரதானமாக கற்பிக்கும் பாடமாக அதற்குப் புறம்பான பாடம் ஒன்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள்</td></tr>
<tr><td>VI</td><td>நியமனப் பாடம் குறிப்பிடப்பட்டிருப்பினும், நியமன மொழி மூலம் குறிப்பிடப்பட்டிராமை</td><td>உரிய ஆட்சேர்ப்புக்குரிய வர்த்தமானி அறிவித்தலின் மூலமோ அல்லது ஆட்சேர்க்கும் போது அதிகாரிகளால் உறுதிப்படுத்த முடியும் எனின், அதற்கமைய தீர்மானித்தல் அல்லது அவ்வாறாக உறுதிப்படுத்த முடியாத பட்சத்தில் பரிசீலனை செய்யப்படும் நாள் வரையில் உரிய பாடத்தை கற்பித்துள்ள மொழி மூலம் அல்லது மொழி மூலம் மாற்றமடைந்திருப்பின், ஆகக்குறைந்தது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | அண்மித்த முந்தைய 05 வருடங்கள் கற்பித்துள்ள மொழி மூலத்தை நியமன மொழி மூலமாக தீர்மானித்தல் |
| **VII** | நியமனப் பாடத்திற்குரிய நியமன மொழி மூலம் சிங்களம் அல்லது தமிழ் என்பதாக குறிப்பிடப்பட்டுள்ள அல்லது உறுதிப்படுத்த முடியுமாக இருப்பினும் பிற்காலத்தில் பாடசாலை அல்லது அரசாங்கத்தின் தேவை கருதி ஆங்கிலம்/ இரு மொழி மூலம் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள ஆசிரியர்கள் | நியமன மொழி மூலம் சிங்களம் அல்லது தமிழாக இருந்தாலும் பிற்காலத்தில் முறைமையில்/ அரசாங்கத்தின் தேவை கருதி தொடர்ச்சியாக அண்மித்த முந்தைய 05 வருடங்களாக ஆங்கிலம்/ இரு மொழி மூலமாக கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பின், நியமன மொழி மூலம் ஆங்கிலம் என்பதாக தீர்மானித்தல் (இருப்பினும் பொது நிர்வாக சுற்றுநிருபம் 29/98 இன் கீழ் ஆங்கில மொழிக்கான வழங்கப்படும் மொழிக் கொடுப்பனவை வழங்குவதற்கு இதனைத் தடையாக கருதக்கூடாது) |

**குறிப்பு : மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்காக கற்பித்தலில் ஈடுபட்டுள்ள பிரதான பாடம் எனும் போது ஆசிரியர் ஒருவர் ஏதேனும் ஒரு வருடத்திற்குரிய கால அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் எண்ணிக்கையில் 50% சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கும் பாடம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.**

**6.** நியமனப் பாடத்தை மாற்றுவதற்கான கோரிக்கைகளை பரிசீலனை செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் கால வரையறைகள்

6.1. 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் தொழிற் பாடத்துறைக்குரிய பாடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதன் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆசிரியர்கள், வெளிநாட்டு மொழிகள், விசேட கல்வி மற்றும் மாணவர் ஆலோசனை ஆகிய பாடங்கள் தவிர்த்து 2024.01.01ம் திகதிக்கு முன்னர் ஏனைய பாடங்களுக்காக நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு மாத்திரம் இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகளின் கீழ் நியமனப் பாடத்தை தீர்மானிக்கவோ/ மாற்றம் செய்யவோ வேண்டும். இருப்பினும் மேலே 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சேவை அனுபவத்தின் அடிப்படையில் நியமனப் பாடத்தை மாற்றுவதற்காக விண்ணாப்பிக்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களின் கீழுள்ள ஆசிரியர்களும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

6.2. இவ்வாறாக நியமனப் பாடத்தை மாற்றுவது தொடர்பில் உரிய ஆசிரியர்களது தகைமைகளைப் பரிசீலனை செய்த பின்னர் முறையாகவும், மிகவும் கவனமாகவும் தீர்மானம் எடுத்தல் வேண்டும். மாகாண ஆசிரியர்களது நியமனப் பாடத்தை மாற்றுவதற்குரிய கோரிக்கைகளை உரிய மாகாண அதிகாரிகளிடம் முன்வைக்க வேண்டும் என்பதுடன், தேசிய பாடசாலை ஆசிரியர்களது நியமனப் பாடத்தை மாற்றுவதற்குரிய

*கோரிக்கைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளர்களது பரிந்துரைகளுடன் கல்விச் செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டும்.*

6.3. *மேற்படி 5 வது பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகுதிகளுக்கும் உரித்தான ஆசிரியர்கள் இங்கு உப ஆவணம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய நியமனப் பாடத்தை தீர்மானித்தல்/ மாற்றுவதற்கான கோரிக்கையினை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.*

6.4. *அவ்வாறே, குறித்த மாதிரிப் படிவத்திற்கமைய உறுதிப்படுத்தக்கூடிய தகவல்களை அதிபர் உறுதிப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்த பின்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிப்பட்ட கோவைக்கமைய அதிபரால் அனுமதிக்கப்பட்ட கால அட்டவணைகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் கல்விசார்/ தொழில்சார் தகைமைகள், தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட மற்றும் சேவை விபரங்களை உறுதிப்படுத்தி, உரிய பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரது பரிந்துரை சகிதம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.*

6.5. *அதன் பின்னர் மாகாணப் பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகள் ஆகிய இரு வகைகளுக்குமுரிய ஆசிரியர்களதும் குறித்த கோரிக்கைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் அவரால் கீழ்வரும் 6.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைப்பு அல்லது அதனையொத்த வகையில் பொருத்தமான உத்தியோகத்தர்களை உள்ளடக்கி அமைக்கப்பட்ட குழுவொன்றினூடாக பரிசீலனை செய்து குறித்த ஒவ்வொரு கோரிக்கைகளுக்குமான குழுவின் பரிந்துரைகளை கல்விச் சான்றிதழ்கள், கால அட்டவணைகள் மற்றும் ஏனைய உரிய ஆவணங்கள் சகிதம் மேற்படி 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய நியமன அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.*

6.6. *அவ்வாறே எவரேனும் ஒரு ஆசிரியரால் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தகைமைகளின் உள்ளடக்கங்களை தீர்மானிப்பதற்காக, தேவையான பட்சத்தில் பாடம் சார்ந்த நிபுணத்துவ அறிவை உடைய அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படும் குழுவைத் தவிர்த்த வேறு ஒரு உத்தியோகத்தர்/ வாண்மையாளரின் கருத்து அல்லது பரிந்துரையை விசாரித்து தீர்மானிக்க முடியும்.*

6.7. **குழுவின் கட்டமைப்பு :**

- **I.** ***மாகாணக் கல்விப் பணிப்பாளர்***
- **II.** ***அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ பிரதிக் கல்விப் பணிப்பாளர்***
- **III.** ***ஆசிரியர் தாபனம்/ பாடசாலை நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ பிரதிக் கல்விப் பணிப்பாளர்***

## IV. உரிய பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்

6.8. எவரேனும் ஒரு ஆசிரியரின் முதல் நியமனக் கடிதத்திற்குரிய நியமன அதிகாரி, தற்போது சேவையாற்றும் சேவை நிலையத்திற்கமைய மாற்றமடைந்திருப்பின் (மாகாணங்களுக்கிடையேயான இடமாற்றங்கள் மூலம் அல்லது மத்திய அரசிற்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ள காரணத்தால்) தற்போதைய சேவை நிலையத்திற்கமைய உரிய நியமன அதிகாரியால் இந்த நியமனப் பாடத்தை மாற்றுவதற்கான அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

6.9. அதற்கமைய, நியமனப் பாடத்தை தீர்மானித்தல்/ மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம், மாகாணப் பாடசாலை ஆசிரியர்கள் எனின், உரிய மாகாண அரசாங்க சேவையின் நியமன அதிகாரியாலும் (மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அல்லது மாகாணக் கல்விச் செயலாளர்) தேசிய பாடசாலை ஆசிரியர்கள் எனின் நியமன அதிகாரியான கல்விச் செயலாளராலும் எடுக்கப்படல் வேண்டும். குறித்த நியமனப் பாடத்தை தீர்மானித்தல்/ மாற்றுதல் தொடர்பில், இங்கு உப ஆவணம் II / உப ஆவணம் III இல் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய குறித்த ஆசிரியருக்கு உரிய நியமன அதிகாரியால் அறிவுறுத்தப்படல் வேண்டும்.

6.10. **கால வரையறைகள்**

| தொடர் இல. | செயற்பாடு | கால வரையறைகள் |
|---|---|---|
| 01. | விண்ணப்பம் கோருதல் | ஒக். 01 - ஒக். 22 |
| 02. | விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளரூடாக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் | ஒக். 23 - நவ.14 |
| 03. | மாகாணக் கல்விப் பணிப்பாளர், உரிய குழுவின் பரிந்துரையுடன் நியமன அதிகாரிக்கு சமர்ப்பித்தல் | நவ.17 - டிச.08 |
| 04. | நியமன அதிகாரியால் உரிய அனுமதியளிக்கப்பட்டு நியமனப் பாடத்தை மாற்றுதல்/ தீர்மானித்தல் தொடர்பான கடிதத்தை வழங்குதல் | டிச.09 - டிச. 31 |

**7.** எதிர்வரும் காலங்களில் ஆசிரியர் ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது குறிப்பாக நியமனப் பாடத்தைத் தீர்மானித்தல் மற்றும் நியமனப் பாடங்களுக்குரியதாக கால அட்டவணைகளை வழங்குதல்.

**7.1.** ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கமைய நியமனதாரர், நியமனம் பெற்றுக் கொள்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள பாடம் அவரது நியமனப் பாடமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும்

என்பதுடன், கட்டாயமாக முறையான நியமனக் கடிதத்தில் குறித்த நியமனப் பாடத்தினைக் குறிப்பிடுவதற்கு உரிய நியமன அதிகாரிகள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இதன் போது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள, தற்போது வலுவில் உள்ள கல்விச் சுற்றுநிருபம் 06/2021 மற்றும் அது சார்ந்து வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களுக்கு அமைவாக நியமனப் பாடங்களின் பெயர்களை சரியாக பயன்படுத்துவதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

**7.2.** அவ்வாறே இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் "அ" பின்னிணைப்பின் 2(ii) ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய அல்லது ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருப்பின் அவ் விதிமுறைகளுக்கமைய அல்லது மாகாண நியமன அதிகாரிகளால் பின்பற்றப்படும் வேறு செயன்முறைகளுக்கு அமைய உரிய ஆசிரியர் நியமனதாரர்களது நியமன மொழி மூலத்தை தீர்மானித்து, அதனையும் நியமனப் பாடத்துடன் குறிப்பிடுவது கட்டாயமாகும். அவ்வாறாக நியமனக் கடிதத்தில் குறிப்பிட முடியாத சந்தர்ப்பங்களில் (உ+ம்: வெளிநாட்டு மொழிப் பாடங்கள்) வேறு கடிதம் ஒன்றினூடாகவேனும் உரிய ஆசிரியர்களது தனிப்பட்ட கோவையில் நியமன மொழி மூலம் தொடர்பான தகவல்களை உள்ளடக்க நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

**7.3.** எவரேனும் ஒரு ஆசிரியரை ஏதேனும் ஒரு பாடசாலையில் சேவையில் ஈடுபடுத்திய பின்னர் அவரது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனப் பாடம் மற்றும் நியமன மொழி மூலத்திற்கமைய குறித்த நியமனப் பாடத்தை பிரதானமாக கற்பிக்கும் பாடமாக அதிக எண்ணிக்கையிலான பாடவேளைகளை (ஆகக் குறைந்தது மொத்தப் பாடவேளைகளின் எண்ணிக்கையில் 60%) உள்ளடக்கி கால அட்டவணையொன்றை வழங்குவதற்கு பாடசாலை அதிபர் நடவடிக்கையெடுத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எண்ணிக்கையில் பாடவேளைகளை வழங்க முடியாத பட்சத்தில், அது தொடர்பில் நியமன அதிகாரிக்கு தாமதமின்றி அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு அதிபரைச் சாரும்.

**7.4.** அவ்வாறே, அனைத்து வலயக் கல்வி அலுவலகங்களதும் பாடங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தமது பாடங்களுக்குரியதாக குறித்த கல்வி வலயத்திற்குரிய பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு அவர்களது நியமனப் பாடத்திற்குரியதான போதுமான எண்ணிக்கையிலான பாடவேளைகளை உள்ளடக்கிய கால அட்டவணை வழங்கப்பட்டுள்ளதா என்பதை தனிப்பட்ட வகையில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் வலயக் கல்விப் பணிப்பாளரை அறிவுறுத்தி, நியமன அதிகாரிக்கு அது தொடர்பில் அறிவித்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**7.5.** அத்துடன், உரிய நியமனப் பாடத்திற்குப் மாற்றமாக வேறு பாடம் ஒன்றை பிரதான கற்பித்தல் பாடமாக கற்பித்து, பிற்காலத்தில் இடமாற்றம் மற்றும் வேறு சேவைகளுக்கு (உ+ம் இலங்கை கல்வி நிர்வாக சேவை/ இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை) நியமனம் பெறும் சந்தர்ப்பங்களில் சிக்கலான நிலைமைகள் ஏற்படும் என்பதால், தமது

நியமனப் பாடத்துடன் பொருந்தும் வகையில் கால அட்டவணையைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசிரியர்களதும், அதற்காக சந்தர்ப்பமளிப்பதற்கு அதிபர்களதும் கவனத்தை செலுத்தச் செய்தல் வேண்டும்.

**8.** இந்த சுற்றுநிருபத்தின் விதிமுறைகளின் பிரகாரம் நியமனப் பாடத்தை மாற்றியதன் பின்னர் தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையையும் (NEMIS) அதற்குரியதாக இற்றைப்படுத்துவதற்கு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

**9.** இவ் விடயம் தொடர்பில் மேலதிக தெளிவுபடுத்தல்கள் அவசியம் எனின், அதற்காக கீழே தரப்பட்டுள்ள விபரங்களூடாக சிரேஷ்ட உதவிச் செயலாளரை (ஆசிரியர் தாபனம்) தொடர்புகொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கம் - 011 2784819**

***முகவரி - கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு***
***இசுருபாய, பெலவத்தை, பத்தரமுல்ல***

***நாலக களுவெவ***
***செயலாளர்***
***கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு***

## கல்விச் சுற்றுநிருப இலக்கம் 07/2019 (i) இன் கீழ் ஆசிரியர்களது நியமனப் பாடத்தை மாற்றுவதற்கான விண்ணப்பப் படிவம்

**<u>I ம் பகுதி</u>**

1. ஆசிரியரின் முழுப் பெயர் :- ....................................................................................................

   ..................................................................................................................................

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ..................................................................................

3. தற்போது சேவையாற்றும் பாடசாலை :- ...............................................................................

4. தனிப்பட்ட முகவரி :- ....................................................................................................

   ..................................................................................................................

5. முதல் நியமனத் திகதி :- ........................................................................................

6. நியமனம் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதா? இருப்பின், நிரந்தரப்படுத்தப்பட்ட திகதி :-

   ......................................................

7. முதல் நியமனப் பாடம் (நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுதவும், நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைக்கவும்) :- ......................................

8. நியமன மொழி மூலம் (நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) :- ..........................

9. தற்போது கற்பிக்கும் பாடம்/ பாடங்கள் (ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களைக் கற்பிப்பதாயின் பிரதானமாக கற்பிக்கும் பாடத்திற்கு எதிரே அது தொடர்பில் குறிப்பிடவும்):-

   ..................................................................................................................

   ..................................................................................................................

10. நியமனப் பாடத்தை மாற்றுவதற்காக சுற்றுநிருபத்தின் 05 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வகுதியின் கீழ் விண்ணப்பிக்கின்றீர்கள்?:-..............................................................................

    ..................................................................................................................................

    ..................................................................................................................................

    ..................................................................................................................................

11. முதல் நியமனம் முதல் இது வரையில் பிரதானமாக கற்பிக்கும் பாடங்கள் தொடர்பான தகவல்கள் (அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கால அட்டவணைகள், தனிப்பட்ட கோவைகளில் உள்ள செயலாற்றுகை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

| தொடர் இல | பாடசாலை | கால எல்லை | பிரதான கற்பித்தல் பாடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

12. நியமனப் பாடத்தை மாற்றுவதற்காக விண்ணப்பிக்கும் வகுதியின் கீழ், குறித்த பாடத்திற்குரியதாக பூர்த்தி செய்துள்ள கல்வி/ தொழில்சார் தகைமைகள் (கல்விச் சான்றிதழ்கள் மற்றும் விவரிக்கப்பட்ட பெறுபேறுக் குறிப்புக்களை இணைப்புக்களாக சமர்ப்பிக்க வேண்டும்)

| கல்வி/ தொழில்சார் தகைமைகள் | பெற்றுக் கொண்ட பல்கலைக்கழகம்/ நிறுவனம் | செல்லுபடியாகும் திகதி | இணைப்பிற்குரிய இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

13. மேலே 1 முதல் 10 வரையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்பதை இத்தால் உறுதியளிக்கின்றேன். பொய்யான அல்லது போலியான தகவல்களை குறிப்பிடுவது ஒழுங்காற்று ரீதியில் தண்டனை கிடைக்கக்கூடிய தவறு என்பதை நன்கறிந்துள்ளேன்.

.............................................. ..............................................

விண்ணப்பதாரரின் கையொப்பம் திகதி

**II ம் பகுதி : *அதிபரின் உறுதிப்படுத்துகை***

**14.** ……………………………………………………………………………… *எனும் ஆசிரியர் இப் பாடசாலையில் சேவையாற்றுவதாகவும், அவர் தற்போது கற்பிக்கும் கால அட்டவணை சரியானது என்பதாகவும், உரிய சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால், கற்பிக்கும் பிரதானமான பாடம்* …………………………………………… *மற்றும் கற்பிக்கும் மொழி மூலம் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் (பொருத்தமானவாறு வெட்டி விடுக) என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்***.**

**………………………………………** **திகதி: …………………………………**

***அதிபரின் கையொப்பம்***

*பதவி முத்திரை :*

**III *ம் பகுதி : வலயக் கல்வி அலுவலகத்தின் பாடப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை***

15. *இந்த ஆசிரியரால் மேலே* II*ம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கற்பிக்கும் பாடம் மற்றும் பிரதானமாக கற்பிக்கும் மொழி மூலம் ஆகியன சரியானவை/ தவறானவை.*
*அவரது குறித்த பிரதானமாக கற்பிக்கும் பாடத்திற்கமைய நியமனப் பாடத்தை* ………………………… *எனவும் / அல்லது நியமன மொழி மூலத்தை* …………………………… *என்பதாக தீர்மானிப்பதற்கு/ மாற்றுவதற்கு பரிந்துரை செய்கின்றேன்/ செய்யவில்லை.*

*பரிந்துரைக்காவிடின் அதற்கான காரணங்கள்:* ……………………………………………………………
………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

……………………………… ………………………………

*பாடப் பணிப்பாளரின் கையொப்பம்* *திகதி*

*பதவி முத்திரை*

இவ் ஆசிரியர் மேலே I ம் பகுதியில் குறிப்பிட்டுள்ள தனிப்பட்ட/ சேவை மற்றும் கல்விசார் தகைமைகள் தொடர்பாக தனிப்பட்ட கோவையுடன் பரிசோதித்ததுடன் அதற்கமைய அத் தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்/ உறுதிப்படுத்தவில்லை. அவ்வாறே அவரது மொத்த சேவைக் காலத்தினுள் பிரதானமாக கற்பித்தல் பாடமாக குறிப்பிட்டுள்ள தகவல்கள் தனிப்பட்ட கோவையுடன் பொருந்துகின்றன. ஆகையால் மேற்படி பாடப் பணிப்பாளரது பரிந்துரையைப் பரிசீலனை செய்து அவரால் கோரப்படும் பாடத்தை அவரது நியமனப் பாடமாகவும் ............................... மற்றும்/ அல்லது நியமன மொழி மூலம் …………………………… எனத் தீர்மானிப்பதற்கும்/ மாற்றுவதற்கும் பரிந்துரை செய்கின்றேன்/ செய்யவில்லை.

16. பரிந்துரை செய்யவில்லை எனின் காரணம்: ...........................................................................
....................................................................................................................................
..........................................................................................................

............................................ .....................................

வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் திகதி
பதவி முத்திரை

IV ம் பகுதி: மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்படும் நியமனப் பாடத்தை மாற்றுவது தொடர்பான குழுவின் பரிந்துரை

17. இவ் ஆசிரியரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள அனைத்து இணைப்புக்களையும் நன்கு பரிசோதித்து உறுதிப்படுத்தியதாகவும், கல்விச் சுற்றுநிருபம் 07/2019(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய வகுதிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

அதற்கமைய, கல்விச் சுற்றுநிருபம் 07/2019(i) இன் விதிமுறைகளுக்கமைய அவரது நியமனப் பாடத்தை ............................... ஆகவும் மற்றும்/ அல்லது நியமன மொழி மூலமாக .................................. ஐத் தீர்மானிப்பதற்கும்/ மாற்றுவதற்கும் பரிந்துரை செய்கின்றேன்/ செய்யவில்லை.

பரிந்துரை செய்யவில்லை எனின் காரணம்: ......................................................................
....................................................................................................................................
..........................................................................................................

குழு அங்கத்தவர்களது கையொப்பத்துடன் பதவி முத்திரை

| தொடர் இல. | பெயர்/ பதவி | கையொப்பம் | பதவி முத்திரை |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |
| 04 | | | |
| 05 | | | |

திகதி: ..........................................................

**V ம் பகுதி: *நியமன அதிகாரியின் அனுமதி***

18. மே IVம் பகுதின் கீழ் தரப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய இவ் ஆசிரியரின்

நியமனப் பாடம்: .......................................................................

நியமன மொழி மூலம் :....................................................................

என இத்தினம் முதல் தீர்மானிப்பதை/ மாற்றுவதை அனுமதிக்கின்றேன்/ அனுமதிக்கவில்லை.

....................................................... ........................................

நியமன அதிகாரியின் கையொப்பம் திகதி

உப ஆவணம் III

திகதி: ...............................................

அதிபரூடாக,

<ஆசிரியரின் பெயர்>

<தற்போதைய சேவை நிலையம்>

**<u>கல்விச் சுற்றுநிருபம் 07/2019(i) இன் கீழ் நியமனப் பாடத்தை மாற்றுதல்</u>**

<முதல் நியமனக் கடிதத்தை வழங்கியுள்ள நியமன அதிகாரியால் > <முதல் நியமனக் கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உ+ம்: மேல் மாகாண ஆசிரியர்/ இலங்கை ஆசிரியர் > சேவைக்கு நியமிக்கும் வகையில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கம் ...................................................... மற்றும் ........................................... ம் திகதியுடைய நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனப் பாடம்/ மொழி மூலம், <நியமனப் பாடத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கும் திகதியைக் குறிப்பிடவும்> ம் திகதி முதல் கீழ்வருமாறு மாற்றம் செய்யப்படுகின்றது.

புதிய நியமனப் பாடம்: ...................................................................

புதிய நியமன மொழி மூலம்: .................................................................

< திருத்தம் செய்யப்படுவது நியமனப் பாடம் அல்லது மொழி மூலம் ஆகியவற்றுள் ஒன்றை மாத்திரம் எனின் உரிய பகுதியில் மாத்திரம் குறிப்பிடவும்>

02. தங்களது மேற்குறிப்பிடப்பட்ட நியமனக் கடிதத்தின் ஏனைய நிபந்தனைகள் அதேபோன்று தொடர்ந்தும் வலுவில் இருக்கும்.

<நியமன அதிகாரியின் பெயர்>

<பதவி>

**பிரதிகள்:**

1. மாகாணக் கல்விப் பணிப்பாளர்,.............................. மாகாணம் - தங்களது இலக்கம் ...................... மற்றும் ……………………….. திகதியுடைய கடிதத்திற்கமைய தகவலுக்காக
2. வலயக் கல்விப் பணிப்பாளர், .................................... - உரிய நடவடிக்கைக்காக.
3. அதிபர், ......................................................... - உரிய நடவடிக்கைக்காக.
4. தனிப்பட்ட கோவைக்கு

உப ஆவணம் II

அதிபரூடாக,

<ஆசிரியரின் பெயர்>

<தற்போதைய சேவை நிலையம்>

**<u>கல்விச் சுற்றுநிருபம் 07/2019(i) இன் கீழ் ஆசிரியர் நியமனப் பாடத்தைத் தீர்மானித்தல்</u>**

<முதல் நியமனக் கடிதத்தை வழங்கியுள்ள நியமன அதிகாரியால் > <முதல் நியமனக் கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உ+ம்: மேல் மாகாண ஆசிரியர்/ இலங்கை ஆசிரியர் > சேவைக்கு நியமிக்கும் வகையில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கம் ...................................................... மற்றும் .......................................... ம் திகதியுடைய நியமனக் கடிதத்தில் நியமனப் பாடம் மற்றும் நியமனக் கடிதத்தில் நியமன மொழி மூலம் <நியமன மொழி மூலம் அல்லது நியமனப் பாடம் ஆகிய இரண்டில் ஒன்று மாத்திரம் எனின், உரிய பகுதியை மாத்திரம் உள்ளடக்கவும் > குறிப்பாக குறிப்பிடப்படவில்லை என்பதால் <நியமனப் பாடத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கும் திகதியைக் குறிப்பிடவும்> ம் திகதி முதல் தங்களது நியமனப் பாடம் மற்றும் மொழி மூலம் கீழ்வருமாறு இருத்தல் வேண்டும் எனத் தீர்மானிக்கின்றேன்.

புதிய நியமனப் பாடம்: ..................................................................

புதிய நியமன மொழி மூலம்: ...............................................................

02. தங்களது மேற்குறிப்பிடப்பட்ட நியமனக் கடிதத்தின் ஏனைய நிபந்தனைகள் அதேபோன்று தொடர்ந்தும் வலுவில் இருக்கும்.

<நியமன அதிகாரியின் பெயர்>

<பதவி>

**பிரதிகள்:**

1. மாகாணக் கல்விப் பணிப்பாளர்,.............................. மாகாணம் - தங்களது இலக்கம் ...................... மற்றும் ………………………… திகதியுடைய கடிதத்திற்கமைய தகவலுக்காக
2. வலயக் கல்விப் பணிப்பாளர், .................................... - உரிய நடவடிக்கைக்காக.
3. அதிபர், ......................................................... - உரிய நடவடிக்கைக்காக.
4. தனிப்பட்ட கோவைக்கு